**தலைப்பு 269 – மட்டக்களப்பு மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 26 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் நிதிக்கூற்றுக்கள் ஒத்திருக்கின்றன என்பதை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **நிதிச் செயலாற்றல் கூற்று** | | |
| கொம்ப்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம், மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் இனங்காணப்பட்ட காணிப் பகுதி 24 ஹெக்டெயராக மதிப்பிடப்பட்டு அதன் பெறுமதி ரூபா 559 மில்லியனாக நிதியல்லாத சொத்துகள் கூற்றில் காட்டப்பட்டது. எனினும், நிதி நிலைமைக் கூற்றில் (ஏசிஏ-பி) குறிப்பிடப்பட்ட காணியின் பெறுமதி ரூபா 487 மில்லியன் கூட்டுமொத்தமாகும். ஆகையால் மேற்படி இரண்டு கூற்றுகளுக்கும் இடையே ரூபா 72 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், வேறுபாடுகளை சீர்செய்வதற்கும் குறித்த பிரதேச செயலகங்களில் இருந்து காணி உரிமைத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகத்தினால் உரிமைத்துவத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | காணிகளின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நான்கு பிரதேச செயலகங்களின் காணி சுவீகரிப்பு தொழிற்பாடுகளுக்காக பெறப்பட்ட ரூபா 9.9 மில்லியன் தொகை உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் 2 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையான காலவீச்சில் வைப்பு கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பில் நீண்ட நிர்வாக செயன்முறைகள் காணப்படுகின்றன. சம்பந்தப்பட்ட 04 பிரதேச செயலகங்களில் காணி சுவீகரிப்பு செயன்முறை இடம்பெற்று வருகிறது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வைப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தில் உள்ள நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அம்முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேணடும். ஆனால் முறைமைகளை மீளாய்வு செய்து கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு அடைந்துகொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | கிரண் மேற்கு பகுதியில் கால்நடை வளர்ப்புக்கு இருவர் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், 25 இற்கும் மேற்பட்ட மாடுகளையும், 50 ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர் | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவப்பட்ட அளவுகோல்களின் பிரகாரம் பயனாளிகளை தெரிவுசெய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காணியையும் வைத்திருந்த அவ்வாறான செல்வந்தர்கள் செயற்திட்ட அளவுகோல்களை மீறி தெரிவுசெய்யப்பட்டிருந்தனர் என்பது கண்டறியப்பட்டது. | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 90 விவசாயப் பயனாளிகளுக்கு 90 தண்ணீர் பம்பிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,387,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், வழங்கப்பட்ட தண்ணீர் பம்பிகளில் பெரும்பாலானவை பயிரிடல் நடவடிக்கைகளுக்காக அவற்றை பயன்படுத்தாமல் விவசாயிகளின் வீட்டிலேயே வைக்கப்பட்டுள்ளன. மேலும், பயனாளிகளின் குடியிருப்புக்களில் இருந்து வெகு தொலைவில் உள்ள வனப்பகுதியில் பயிரிடல் காணி அமைந்துள்ளதால் பயன்படுத்தப்படும் தண்ணீர் பம்பிகளின் பாதுகாப்பு திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | நீர் பம்பிகளை குறித்துரைத்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பயன்படுத்தப்பட்ட தண்ணீர் பம்பிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் (WFP) மற்றும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (KOICA) ஆகியவற்றுடன் இணைந்து, இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்திற்கு எதிராக சமூகங்களின் பின்னடைவைக் கட்டியெழுப்புவதற்கான மூன்று வருட செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. செயற்திட்ட இலக்கானது பாதிக்கப்படக்கூடிய கிராமப்புற சமூகங்களிற்காக வடிவமைக்கப்பட்ட வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களாகும். எனினும், பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்படாத நபர்களுடன் ஒப்பிடும் போது தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தின் தெரிவுசெய்தல் அளவுகோல்களின் பிரகாரம் பாதிக்கப்படக்கூடிய பயனாளிகளை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பது அவதானிக்கப்பட்டது. கால்நடை வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, விவசாய கிணறு அமைத்தல் மற்றும் நுண் நீர்ப்பாசன முறைமைகள் போன்றவற்றை தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளில் அதிகமானோர் மேற்கொள்ளுகின்றனர். சில பயனாளிகள் இரண்டு ஏக்கருக்கும் அதிகமான நெற்காணிகளை கால்நடைகளுடன் கொண்டுள்ளனர். உதாரணமாக இரண்டு பயனாளிகள் 107 கால்நடைகளை கொண்டிருப்பதும், அவர்களில் ஒருவர் மண்டபத்தடி கமநல சேவை நிலைய பகுதியில் 8 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்காணியை கொண்டிருப்பதும் வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (ஆ) | பகுதியளவு செறிவான ஆடு முகாமைத்துவத்திற்காக 10 ஆடுகளுக்கு குறைவாக உள்ள ஆடு விவசாயிகளுக்கு உயர்த்திய ஆட்டு கொட்டகைகளை அமைப்பதற்கு நிதி உதவியாக குடும்பம் ஒன்றிற்கு ரூபா 215,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும், 10 ஆடுகளுக்கு மேல் கொண்டிருந்த பயனாளிகளுக்கு அவர்களது பாதிப்புத் தன்மையை கருத்தில் கொள்ளாமல் நிதியுதவி வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆடு வளர்ப்புக்கான வரையறுக்கப்பட்ட தெரிவு அளவுகோலின் பிரகாரம் இளைஞர்கள்/ பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். எனினும், 61 தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் 50 வயதுக்கு மேற்பட்டும் அவர்களில் இருவர் 77 வயதுக்கு மேற்பட்டும் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தின் தெரிவுசெய்தல் அளவுகோல்களின் பிரகாரம் பாதிக்கப்படக்கூடிய பயனாளிகளை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கு இணைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றுக்கு 2021 சனவரியில் இடம்பெற்ற மோட்டார் வாகன விபத்து தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கு சபையொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டரை ஆண்டுகள் கடந்த பின்னரும் 2023 மே மாத இறுதி வரை விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேச செயலகங்களிற்கு இணைக்கப்பட்ட இரண்டு மோட்டார் வாகனங்களுக்கு 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகம் விசாரணை சபைகளை 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நியமித்திருக்கவில்லை. அந்த விபத்துக்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை அடையாளம் கண்டு, அதனால் ஏற்பட்ட நட்டங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | விசாரணையை துரிதப்படுத்துவதற்கும் நட்டங்களை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முகாமைத்துவப் பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் வருகின்ற தெட்டதீவு - வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்த பெறுவனவு புத்தகம் (பொது-172) முடிவடைந்த பின்னர் பொதுமக்களிடமிருந்தான பண சேகரிப்பிற்கு பெறுவனவுச்சிட்டையை வழங்குவதற்கு 2022 ஆகஸ்ட் 26 முதல் புதிய பெறுவனவுப் புத்தகம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | NIC விண்ணப்பங்களை வழங்கும் செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிராம அலுவலர்களை (GN) நியமிப்பதற்காக கிராம சேவையாளர் பிரிவில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளுதல் போன்ற பகுத்தறிவான மற்றும் நியாயமான கொள்கையை | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையின் பிரகாரம் கடமைகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பின்பற்றாமல், மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலாளரினால் GNs நியமிக்கப்பட்டுள்ளனர். | | எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 செயற்பாட்டு வினைத்திறமைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிரண் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் பிரதேச செயலாளரின் பரிந்துரையை பெற்றுக்கொள்ளாமலும், அப்பகுதியில் ஆற்று மணல் அகழ்விற்காக ஆற்றின் இருப்பைக் கருத்தில் கொள்ளாமலும் ஒருவருக்கு ஆற்று மணல் அகழ்வு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கனிம மற்றும் மணல் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட நில எல்லைக்குள் ஆற்று மணலை மாத்திரம் அகற்றுவதற்காக மேற்படி உரிமம் செல்லுபடியாகும். எனினும், அந்த உரிமத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு மணல் அகழப்பட்டது. மேலும், இரண்டு மாதங்களுக்குள் மொத்தம் 1400 மணல் கியூப்கள் எந்த அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களும் இல்லாமல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | மணல் அகழ்வு உரிமங்களுக்கான பரிந்துரைகள் மீது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவி வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வள்ளி ஆறு மற்றும் மாதுரு ஓயா மற்றும் வள்ளி ஆறு ஆற்றங்கரைக்கு அருகாமையிலும், வள்ளி ஆறு ஆற்றங்கரையில் உள்ள கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளிவட்டவான் துறையடி மற்றும் வயல் துறையடி ஆகிய பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த சட்டவிரோத மணல் அகழ்வின் விளைவாக ஆற்றினை அகலப்படுத்துதல் மற்றும் ஆற்றின் இயற்கையான நீர் ஓட்டத்தை மாற்றுதல் போன்ற பல சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் பொறுப்புள்ள பிரதேச செயலகங்கள் அந்த சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு பயனுள்ள நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் பொறிமுறையை வலுப்படுத்ததுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளரிடம் இருந்து மேற்பகுதி மண்ணை அகற்றுவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும் நெற்காணி உரிமையாளர்கள் தமது நெற்காணிகளில் உள்ள மணலை மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்யாமல் தமது சொந்த பாவனைக்காக அகழ்வதற்கு அனுமதிக்கும் உள்நாட்டு மணல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு போரதீவுப்பற்று பிரதேச செயலாளரினால் பரிந்துரை வழங்கப்பட்டு GSMB இற்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் வணிக நோக்கத்திற்காக சட்டவிரோதமான முறையில் கணிசமானளவு மணல் அகழப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | நெற்காணிகளையும், மண்ணையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| (அ) குத்தகைதாரரின் நிதி மற்றும் செயற்பாட்டுத் திறனைக் கருத்தில் கொள்ளாமல், வவுணதீவு மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தினால் நிர்வகிக்கப்படும் புதிதாக புனரமைக்கப்பட்ட ஐதிஹ்யமலை அரிசி ஆலை, ரூபா 62.3 மில்லியன் பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் உட்பட 3 வருட கால குத்தகைக்கு ”ஐத்ய ரூறல் அக்ரி புறடியூசர் கோப்பரேற்றிவ் சொசைட்டி லிமிட்டட்’’ இற்கு வழங்கப்பட்டிருந்தது. இது ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன்பு ரூபா 1,500 மூலதனத்துடன் பதிவு செய்யப்பட்டது. செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு அரிசி ஆலையின் சீரான செயற்பாடு மற்றும் முறையான பராமரிப்புக்காக மேற்படி அரிசி ஆலை குத்தகைதாரருக்கு குத்தகைக்கு விடப்பட்டது. எனினும், இந்த ஆண்டு இறுதி வரை 50 மூடை நெல் மாத்திரமே அரிசியாக மாற்றப்பட்டுள்ளது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும் சந்தை பெறுமதிகளில் குத்தகையை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 98 உத்தியோகத்தர்கள் அவர்களுக்குரிய குடியிருப்புக்களுக்கு அருகிலுள்ள சேவை நிலையத்திற்கு தொடர்ச்சியாக இடமாற்றம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | உத்தியோகத்தர்களை சரியான நடைமுறையொன்றில் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை இடமாற்றக் கொள்கை பொதுவாக பின்பற்றப்பட்ட போதிலும் 188 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் (வரிசை அமைச்சுக்களின் கீழ் இணைக்கப்பட்ட 54 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக) சரியான காரணமின்றி 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக உத்தியோகத்தர்களின் உரிய குடியிருப்புக்கு அருகிலுள்ள சேவை நிலையத்தில் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். மேலும், 5 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் 22 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து பணியாற்றி வருகின்றதுடன் 98 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் (வரிசை அமைச்சுக்களின் கீழ் இணைக்கப்பட்ட 43 உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக) 9 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே சேவை நிலையத்தில் பணியாற்றி வருகின்றனர். | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான இடமாற்றக் கொள்கையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிர்வாக முடிவுகளை எடுக்கும் அதிகாரிகள் தங்கள் தற்றுணிவு அதிகாரங்களை எந்தவித பாரபட்சமும் இன்றி பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான முறைமையொன்று உருவாக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். எனினும், ஆறு பிரதேச | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான இடமாற்றக் கொள்கையை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செயலகங்களைச் சேர்ந்த 20 உத்தியோகத்தர்கள் முறையான இடமாற்றக் கொள்கை அல்லது நடைமுறையைப் பின்பற்றாமல் இடமாற்றம் செய்யப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் 5 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னரே அவர்கள் மீண்டும் அவர்களுக்கு அருகிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.